2022 ஏப்ரல் 29]

அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தங்களுடைய பகுதிகளில் இதுபோன்று பல இடங்களில் சாக்கடை நீரும், தண்ணீரும் ஒன்றாக கலந்து செல்வதால், நோய்த் தொற்று ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இதை ஆய்வு செய்து, 138 நகராட்சிகளிலும் எந்தெந்தப் பகுதிகளில் 100 சதவிகிதம் பணிகள் நடைபெற்றிருக்கின்றன; ஏற்கெனவே தொடங்கப்பட்ட இடங்களில், எங்கு முடிவு பெறாமல் இருக்கின்றன என்பதை கணக்கீடு செய்ய துறைக்கு உத்தரவு தரப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கருத்தில்கொண்டு, விரைவில் அதைச் சீர் செய்வதற்குரிய முழு நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

202—

கலைக் கல்லூரி

***18402—திரு. பி. அய்யப்பன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதி அமைந்துள்ள மதுரை மாவட்டத்தில் தற்பொழுது 3 அரசு கலை மற்றும் அறிவியல்

கல்லூரிகளும், 17 அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 21 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத்தவிர, 1 அரசு பொறியியல் கல்லூரியும், 9 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 1 பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும், 6 அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும், 1 அரசு உதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் 10 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் பி. அய்யப்பன் அவர்கள்.*

திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி, மிகவும் பின்தங்கிய தொகுதி. எனது தொகுதியில், செல்லம்பட்டி ஒன்றியம், விவசாய பூமியாகவும், சேடப்பட்டி மற்றும் உசிலம்பட்டி ஒன்றியங்கள், வானம் பார்த்த மானாவாரி பூமியாகவும் உள்ளன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறநானூற்று பெண்கள் புலியை முறத்தால் அடித்துத் துரத்தியதாக நான் படித்திருக்கிறேன். ஆனால், 1920–ல் எங்கள் சமுதாயத்தை. . . (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை.*

திரு. பி. அய்யப்பன்: *ஐயா, ஒரு நிமிடம். குற்றப் பரம்பரை என முத்திரைக் குத்தி, கைரேகைச் சட்டத்தைக் கொண்டு வந்த ஆங்கில ஏகாதிபத்திய அடக்கு முறையை எதிர்த்து, துப்பாக்கிச் சூட்டில் வீர மரணமடைந்த வீர மங்கை மாயக்காளின் தொப்புள் கொடி உறவுதான் எங்கள் பெண்கள். எனவே, பெண்களுக்கு முக்கியத்துவம் தரும் நமது அரசு, உசிலம்பட்டியில் ஒரு பெண்கள் கலைக் கல்லூரியை அமைத்துக் கொடுக்குமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 29]

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் உசிலம்பட்டி மிகவும் வேண்டிய ஊர். அந்த அடிப்படையில் அதனுடைய தேவைகளையும் நான் நன்கு அறிவேன். குறிப்பாக, உசிலம்பட்டி தொகுதியில் அரசு கலைக் கல்லூரிகளே இல்லையென்றாலும், அரசு உதவிபெறும் கலைக் கல்லூரிகள் இரண்டு இருக்கின்றன. அதில், 2,068 பேர் சேரலாம். ஆனால், இப்போது சேர்ந்திருப்பது 1,728 பேர்தான். காலியிடங்களே இருக்கின்றன. அதிலே மகளிரும் சேர்ந்துகொள்ளலாம். அதுமட்டுமல்ல, சுயநிதி கலைக் கல்லூரிகள் இரண்டு இருக்கின்றன. அதில், 1,184 பேருக்கு, 403 பேர்தான் சேர்ந்திருக்கிறார்கள். நான் அதற்குத்தான் முதல் கேள்வியிலேயே பதில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கல்லூரிகளிலே மாணவர்கள் அதிகமாகச் சேர வேண்டும் என்ற எண்ணத்தோடுதான், அரசுப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு 7.5 சதவிகித இட ஒதுக்கீடும் கொடுத்து, இலவசக் கல்வி வசதியும் கொடுத்து, நீங்கள் சொன்ன அந்தப் பெண்களுக்கும் நிறைய பயன்கள் சேர வேண்டும் என்பதற்காக, உயர் கல்வி படிக்கின்ற பெண்களுக்கெல்லாம் மாதம் ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கின்ற ஒரே முதலமைச்சர், உலகத்திலேயே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். அதையும் அறிவித்து, பெண்கள் கல்வி வளர்வதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல, உசிலம்பட்டியில் தேவர்கள், முக்குலத்தோர்கள் பற்றியெல்லாம் சொன்னீர்கள். இங்கு அடிக்கடி மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் சொல்வார்கள். உசிலம்பட்டியில், அங்கு இருந்தவர்தான் என்னுடைய சம்பந்தி. அந்த அம்மாதான் முதன்முதலில் உங்கள் சமுதாயத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள். அந்த மாதிரி சூழ்நிலைகளெல்லாம் இருந்திருக்கின்றன. பெண்கள் படிக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதுவும் பெண் கல்விக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அங்கு, தேவர் கல்லூரி ஒன்று செயல்படுவதாக, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கதிரவன் போன்றவர்கள் என்னிடம் வந்து முறையிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. ஐ.பி. அவர்களும் சொன்னார்கள். அது சரியாகச் செயல்படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே ஒரு Adhoc

Committee நியமிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, விரைவில் அந்த Adhoc Committee–ம் நியமிக்கப்பட்டு, அந்தக் கல்லூரி மிகச் சிறப்பாகச் செயல்படுவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன் அவர்கள். நன்றி சொல்லி, உட்காருங்கள்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, உசிலம்பட்டியிலிருந்து மதுரைக்கு செல்ல வேண்டுமென்றால் 40 முதல் 50 கிலோ மீட்டர் வரை செல்ல வேண்டியிருக்கிறது. பெண் பிள்ளைகள் அவ்வளவு தூரம் சென்று படிப்பதற்கு இந்தச் சூழ்நிலைகள் உகந்ததாக இல்லை. மேலும், எனது தொகுதியில் அரசு மேல்நிலைப் பள்ளிகள் 6, அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகள் 7, அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிகள் 13, ஆக 26 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல அங்கு சுயநிதிக் கல்லூரிகள், கள்ளர் கலைக் கல்லூரி, Pasumpon Muthuramalinga Thevar College (PMT), அருளானந்தர் கல்லூரி போன்ற கல்லூரிகளில் 3,000 முதல் 4,000 வரை மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். ** என்று நினைக்கிறேன். ஏனென்றால், அவர் ஒரு கல்லூரியில் 1,200 என்றும், இன்னொரு கல்லூரியில் 300 என்றும் சொன்னார்கள். உசிலம்பட்டி பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரியில் 3,000 முதல் 4,000 வரை மாணவச் செல்வங்கள் படிக்கின்றார்கள். அருளானந்தர் கல்லூரியில் 3,000 முதல் 3,500 மாணவர்கள் படிக்கின்றார்கள். ஆகவே, அங்கு கல்வித் தேவை அதிகமாக இருக்கின்றது.

அதுமட்டுமல்ல, உசிலம்பட்டி நகராட்சியில் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான கட்டடங்கள் நிறைய காலியாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான மைதானம், 14 ஏக்கரைக் கொண்டதாக இருக்கிறது. அருகில் கள்ளர் மாணவ, மாணவியர் விடுதி இருக்கின்றது. அங்கேயும் கட்டடங்கள் நிறைய இருக்கின்றன. Hostel–ல் தங்கிப் படிப்பதற்கு வசதி இருக்கிறது. இப்படி நிறைய வசதிகள் இருக்கின்றன. இதற்காக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 29]

அரசு தனியாகச் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இடம் இருக்கிறது; கட்டடம் இருக்கிறது. நீங்கள் மாணவர்களைச் சேர்த்தால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மறுபரிசீலனை செய்யச் சொல்கிறீர்கள்.*

திரு. பி. அய்யப்பன்: *அதனால், இருக்கின்ற கட்டடங்களைப் பயன்படுத்தி அங்கு ஒரு கலைக் கல்லூரி அமைப்பதற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டுமெனத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வி கேட்கும்போது ** சொன்னீர்கள். அதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியினுடைய எண்ணிக்கை வளர்வதற்குக் காரணமாக இருந்தவர், மறைந்த தமிழக முதலமைச்சர் கலைஞர் என்பது வரலாற்று உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அதை பல வகைகளிலே நிரூபிக்க முடியும். அரசு கலைக் கல்லூரிகளில்* shift system*–ஐக் கொண்டு வந்ததும் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான். தற்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், பெண் கல்வி அதிகமாக வளர வேண்டுமென்பதற்காக,* morning shift *மகளிருக்காகவும்,* evening shift *ஆண்களுக்காகவும் அந்தமாதிரி பிரித்துத் தர முடியுமா என்ற ஆலோசனையும் இந்தத் துறையில் இருக்கிறது. அது எந்தெந்தப் பகுதிகளில் தேவைப்படுகிறது என்பதைப் பார்த்து, அந்தமாதிரி உருவாக்கப்படும். நீங்கள் ஏதோ* strength *அதிகமாக இருக்கிறது என்று சொன்னீர்கள். என்னிடம் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. நீங்கள் சொன்னதையும் நான் விசாரிக்கிறேன். உங்கள் தொகுதியில் மொத்தம் நான்கு கல்லூரிகள் இருக்கின்றன. அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகளிலெல்லாம் 3,252 இடங்கள் நிரப்பப்பட*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆனால், அதிலே 2,131 இடங்கள்தான் நிரப்பப்பட்டிருக்கின்றன. மீதி 1,121 இடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றன. எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அவர்களிடம் சொல்லி, அந்த இடங்களிலே மாணவ, மாணவிகள் சேர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். நிச்சயமாக, வருங்காலங்களில் நீங்கள் சொல்லியிருக்கின்ற கருத்துகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆலோசனை செய்து, அங்கு தேவைப்படின், அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறோம்.

ஏனென்றால், நான் முதலிலே சொல்லிவிட்டேன். எல்லா உறுப்பினர்களும் இதே கோரிக்கையைத்தான் வைத்திருக்கின்றார்கள். எனவேதான், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எந்தத் தொகுதியில் அரசு கல்லூரிகள் இல்லையோ அந்தத் தொகுதியில் நீங்கள் முன்னுரிமை செலுத்தி, அதுவும், கிராமப் பகுதிகளில் அந்தக் கல்லூரிகளை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கெல்லாம் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நிச்சயமாக, உங்கள் பகுதியிலும் அந்த மாதிரி சூழ்நிலை வருமானால், மற்ற இடங்களுக்கு, அதாவது first choice அவர்களுக்கு கொடுத்துவிட்டு, கல்லூரிகளே இல்லாத பகுதிகளுக்கு நிச்சயமாக வழங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன் அவர்கள்.

டாக்டர் இரா. இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்தில் அமைந்திருக்கும் அரசு மகளிர் கலைக் கல்லூரியில், முதுகலை மற்றும் முது அறிவியல் படிப்புகளுக்கு மிகுந்த தேவை இருப்பதனால், அதுகுறித்து அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் எனக்குச் சம்பந்தப்பட்ட ஊராகவே கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். உசிலம்பட்டியிலிருந்து இப்போது

2022 ஏப்ரல் 29]

விழுப்புரம் வந்திருக்கிறார். முதன்முதலில் நான் பணியாற்றிய இடம் விழுப்புரம். அங்கிருக்கின்ற தேவைகளையெல்லாம் அந்தக் கல்லூரி முதல்வரும் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகளிர் கல்லூரியில் PG courses *ஆரம்பிக்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார். அதுமட்டுமல்ல, விழுப்புரம் கல்லூரியில்* NCC*–ஐயும் நிறுத்திவிட்டார்கள். மத்திய அரசினுடைய* NCC *அலுவலகத்திற்கு சொல்லி, அதைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கிறோம்.* Additional subjects, *கட்டட வசதிகளையெல்லாம் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால், அது நான் இருக்கின்ற ஊர். எனவே, கண்டிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆலோசனைப் பெற்று, அந்த ஊருக்கு நிச்சயமாக எல்லாவற்றையும் செய்து கொடுப்பதற்கு முன்வருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி தொகுதி என்பது முழுவதும் கிராமப் பகுதிகள் நிறைந்த தொகுதியாகும். அதோடு மட்டுமல்லாமல், அந்தத் தொகுதியில் அரசு கலைக் கல்லூரியோ அல்லது அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியோ இல்லை. மேலும், கல்லூரிகள் இல்லாத தொகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, சாமணப்பள்ளி என்ற கிராமத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். முழுவதுமாக கிராமப் பகுதியாக இருக்கின்ற அந்தத் தொகுதிக்கு ஒரு கலைக் கல்லூரியும், அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியும் இந்த நிதியாண்டிலேயே வழங்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தே மாதங்களில் 31 கல்லூரிகளை அறிவித்திருப்பவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் என்பதை மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் தொகுதிக்கு கல்லூரிகள் வேண்டுமென்று கேட்டிருக்கின்றீர்கள். அதற்காகத்தான் நான் முதல் பதிலிலே சொன்னேன். அங்கு அரசு கல்லூரிகள் இல்லாமல் இருக்குமானால், அதாவது, எந்தத் தொகுதியில், எந்தப் பகுதியில் அரசுக் கல்லூரிகள் இல்லாமல் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் நிச்சயமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும். தளபதியைப் பொறுத்தவரை, நீங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர் என்றுகூட பார்ப்பதில்லை. காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கோரிக்கை வைத்தார் என்று அவருடைய தொகுதிக்கு ஒரு கல்லூரி கொடுத்திருக்கிறார்; அதேபோல, B.J.P. உறுப்பினர் கேட்டார் என்று சென்ற ஆண்டே கல்லூரி கொடுக்கப்பட்டிருக்கின்றது; பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் கோரிக்கை வைத்தார் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருடைய தொகுதிக்கு ஒரு கல்லூரி கொடுக்கச் சொல்லியிருக்கிறார்; CPI உறுப்பினர் கேட்டார் என்பதற்காக, தளியில் ஒரு கல்லூரி கொடுக்கப்பட்டிருக்கிறது; மனிதநேய மக்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் கேட்டார் என்பதற்காக மணப்பாறையில் ஒரு கல்லூரியைக் கொடுத்திருக்கிறார்.*

முற்பகல் 10–20

கட்சி வேறுபாடுகளையெல்லாம் எங்களுடைய தலைவர் அவர்கள் பார்ப்பதில்லை. நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்களுடைய கோரிக்கையை நிச்சயமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தப் பகுதியிலே அரசுக் கல்லூரி இல்லாமல் இருக்குமானால், aided *கல்லூரியும் இல்லாமல் இருக்குமானால், அடுத்த வருடம் அங்கே அமைத்துத் தருவதற்குக் கண்டிப்பாக முயற்சி எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.J. *மணிக்கண்ணன் அவர்கள். எல்லோருக்கும் பொதுவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாகிவிட்டது.*

TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 29]

திரு. A.J. மணிக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டையைச் சுற்றி 45 கிலோ மீட்டர் வரை அரசு கலைக் கல்லூரி இல்லை. அது விவசாயிகள் நிறைந்த பகுதி. மிகவும் பின்தங்கிய பகுதி. எந்தவொரு கலைக் கல்லூரியும் இல்லை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிக்கண்ணன், கேள்விக்கு வாருங்கள். எந்த ஊரில், என்ன வேண்டும் என்பதைக் கேளுங்கள்.

திரு. A.J. மணிக்கண்ணன்: உளுந்தூர்பேட்டையில் அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எல்லோருக்கும் சொன்ன பதிலைத்தான், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிக்கண்ணன் அவர்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, இந்தத் தேவைகள் பல இடங்களில் எழுந்து கொண்டிருக்கின்றன. அங்கே தனியார் கல்லூரி ஒன்று ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், உளுந்தூர்பேட்டையில் ஓர் அரசு கலைக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அந்த மாவட்டத்திலே, சென்ற ஆண்டு திருக்கோவிலூர், அது என்னுடைய தொகுதியாக இருந்தாலும், திருக்கோவிலூருக்கு ஓர் அரசு கலைக் கல்லூரி வழங்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய கோரிக்கை மறுபடியும் பரிசீலிக்கப்பட்டு, உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டையில் ஏனென்றால், அது main road–ல் இருக்கிற இடம். உண்மையிலே அங்கே ஓர் அரசு கல்லூரி தேவைப்படுகிறது என்பதையும் நான் நன்கு அறிவேன். அதை எந்தச் சூழ்நிலையிலே, எப்பொழுது உருவாக்கப்படும் என்பது, நிதிநிலைக்கேற்ப, இந்த அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 203, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.